මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் : LAE/2025/14** **2025.03.14**

## உள்ளூரதிகார சபைகள் தேர்தல் – *2025*
## பெயர்குறித்த நியமனப் பத்திரங்களைக் கையளித்தல் தொடர்பாக.

நடாத்தப்படவுள்ள உள்ளூரதிகார சபைகள் தேர்தலுக்காக பெயர்குறித்த நியமனப் பத்திரங்களைக் கையளிப்பதற்கு உத்தேசித்துள்ள அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் கீழே குறிப்பிடப்படுகின்ற விசேட விடயங்கள் மீது தங்களது கவனத்தைச் செலுத்தவேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. .

- சரியாகவும், தெளிவாகவும் பூரணப்படுத்தப்பட்டுள்ள பெயர்குறித்த நியமனப் பத்திரத்தின் ஒரு பிரதியை மாத்திரம் அத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டிய அனைத்து இணைப்புக்களுடன் உரிய காலப்பகுதியினுள் உரிய மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கையளித்தல் ; அத்துடன்

- இளம் வேட்பாண்மையை உறுதிப்படுத்துவதற்காக மேலதிக மாவட்டப் பதிவாளரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழின் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறில்லையேல் சமாதான நீதவான் அல்லது சத்திய ஆணையாளர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தி வயதை உறுதிப்படுத்துகின்ற சத்தியக் கடதாசியொன்றினை பெயர்குறித்த நியமனப் பத்திரத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்